கால்நடை மருத்துவக் கல்லூரியை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று அமைத்துக் கொடுப்பதற்கு வாய்ப்பினை ஏற்படுத்தித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டும் என்று சொன்னால், இந்திய கால்நடை மருத்துவ அறிவியல் பேரவையின் அனுமதியைப் பெற வேண்டும். அதுமட்டுமல்ல, அதற்கு ஏறக்குறைய 100 ஏக்கருக்கு மேல் நிலம் வேண்டும். அருகில் பண்ணை அமைக்கும் விதத்தில் இட வசதி இருக்க வேண்டும். இதற்கு 100 முதல் 200 கோடி ரூபாய் வரை செலவாகும். எனவே, வருங்காலத்தில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படும்போது, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற சேலம் மாவட்டம் கருத்திலே கொள்ளப்படும். இது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அந்த நேரத்தில் அது பற்றி ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 340, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

340—

சமுதாய நலக் கூடம்

***35140—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் ஊராட்சி ஒன்றியம், ஆயங்குடி ஊராட்சியில் ஆதி திராவிடர் நலத்

2014 ஆகஸ்ட் 5]

துறைமூலமாக சமுதாய நலக் கூடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதி, காட்டுமன்னார்கோவில் ஊராட்சி ஒன்றியம், ஆயங்குடி ஊராட்சியில் விதிகளுக்குட்பட்டு, நிதிநிலைமைக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணை பெற்று, சமுதாயக் கூடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமெரிக்காவைப் பற்றி மார்ட்டின் லூதர் கிங் கண்ட கனவைப்போல, தமிழ்நாட்டைப் பற்றி நம் தங்கத் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் காணும் கனவுகள் ஏராளம், துறைகள்தோறும் தாராளம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, வளம் மிக்க தமிழ்நாடு; வலிமை மிக்க தமிழ்நாடு; சக்தி மிக்க தமிழ்நாடு; சச்சரவுகளற்ற தமிழ்நாடு; வேதனைகளற்ற தமிழ்நாடு; சாதனைகள் மிக்க தமிழ்நாடு; மொத்தத்தில் வளர்ச்சியடைந்த தமிழ்நாடு; அதுதான் மாண்புமிகு அம்மா அவர்களின் உழைப்பில் விளைந்த நம் நாடு என்ற வகையில், (மேசையைத் தட்டும் ஒலி) இலக்கை நோக்கிச் செல்லும் இப்பொன்வேளையில், கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியில், மா. ஆதனூர் ஊராட்சியை வடப்புறமாகவும்; நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை ஒன்றியம், திருச்சிற்றம்பலம் ஊராட்சியில், குமாரமங்கலம் கிராமத்தை தென்புறமாகவும் கொண்டு, அணைக்கரையின் கீழ் அணையின் கீழ்ப்புறம், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே 0.6 டிஎம்சி. அடி கொள்ளளவு கொண்ட தலை மதகுகளுடன் ஒரு கதவணை

400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வாரி வழங்கிய (மேசையைத் தட்டும் ஒலி) விவசாயிகளின் விடிவெள்ளி, வள்ளல்களுக்கெல்லாம் வள்ளல், வரலாற்றுக்கெல்லாம் வரலாறு, முதல்வர்களுக்கெல்லாம் முதல்வர் மாட்சிமைகள் தாங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன் மலர்ப் பாதங்களில் கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, பணிந்து வணங்குகிறேன்.

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் ஊராட்சி ஒன்றியம், ஆயங்குடி ஊராட்சியில் ஆதி திராவிட மக்கள் அதிகம் வசித்து வருகிறார்கள். அதன் அருகிலே குச்சூர், மேலபக்கத்துறை, ரெட்டியூர் ஊராட்சிகளிலும் முழுமையாக ஆதி திராவிட மக்களே நிறைந்து வாழ்கிறார்கள். எனவே, அப்பகுதி மக்களுடைய நலன் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஒடுக்கப்பட்ட மக்களுடைய ஒரே தலைவராக விளங்குகிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று, அங்கே இவ்வாண்டே ஒரு சமுதாய நலக் கூடம் கட்டித் தருவார்களா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் சட்டமன்றத் தொகுதி, காட்டுமன்னார்கோவில் ஊராட்சி ஒன்றியம், ஆயங்குடி ஊராட்சியின் மொத்த மக்கள்தொகை 1,827 ஆகும். இக்கிராமத்தில் சுமார் 773 ஆதி திராவிட மக்கள் உள்ளனர். இப்பகுதியில் ஆதி திராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனை வழங்க ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்ட சர்வே எண் 83/2ஏ-ல், 20 சென்ட் இடம் எதிர்காலத் தேவைக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவ்விடத்தில் நிதிநிலைமைக்கேற்ப சமுதாயக் கூடம் கட்டித் தர மாண்புமிகு புரட்சித் தலைவி முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*